சுருக்கம்

பணியமைப்பு - வேளாண்மை-உழவர் நலத் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி எ. சித்ரா என்பவரின் பணியினை 01.03.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வேநி9) துறை

அரசாணை (அடி) எண். 19

நாள்: 14.03.2022
பிலவ வருடம்
மாசி திங்கள் 30,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண் 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி2 / 45511 / 2021, நாள் 30.04.2021 மற்றும் 28.01.2022

*****

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில், உதகமண்டலம், தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலகத்தில் திறன் பெற்ற மஸ்தூராகப் பணிபுரிந்து வந்த போது 19.04.2015 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த (லேட்) திரு எம். மோகன் என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது மனைவி திருமதி எ. சித்ரா என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 7270 / 2021, நாள் 19.02.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிஅ) பணி நியமனம் செய்து சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குரின் செயல்முறை ஆணை எண் அபி3 / 18330 / 2017, நாள் 24.02.2021-ன்படி தனியர், உதகமண்டலம், தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் (பிஅ) 01.03.2021 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்று தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 01.03.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிஅ) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி எ. சித்ரா என்பவரின் பணியினை 01.03.2021 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு தனியரின் பணியினை வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ. சா. எண் 3768 / க்யூ.1 / 2022-1, நாள் 01.03.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண் 7515 / ஜி1 / 2022, நாள் 10.03.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 (இ).
✓ திருமதி எ.சித்ரா, இளநிலை உதவியாளர் (பி.அ.)
வழி: வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண் 9432 / வேநி9 / 2021
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

ஆட்சி அலுவலர்
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்
உதகமண்டலம்

நகல்: பணிப்பதிவேடு.
நகல்: இருப்புக்கோப்பு 'அ3'.